“தளபதி” இரத்ததான இயக்கம் சார்பில்

# கோவை அரசு மருத்துவமனைக்கு ரத்ததானம் வழங்கும் முகாம்!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் துவக்கி வைத்தார்!

கோவை, மே 23 -

“தளபதி” இரத்ததான இயக்கம் சார்பில் இது வரை 15,000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயனடைந்துள்ளனர் என்று கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா. கார்த்திக் செய்தியாளர்களிடம் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு, கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் ஏற்பாட்டில் “தளபதி” இரத்ததான இயக்க பொறுப்பாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வே.பாலசுப்பிரமணியன் ஒருங்கிணைப்பில் “தளபதி” இரத்ததான இயக்கம் சார்பில் கோவை அரசு மருத்துவமனைக்கு “இரத்த தானம் வழங்கும் முகாம் 17.05.2025 அன்று கோவை, வரதராஜபுரம், சாய் விவாகா மஹாலில் காலை 8.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை நடைபெற்றது. இம்முகாமை கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்கா நல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் துவக்கி வைத்தார்.

செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது : தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர், “தளபதி” அவர்களின் 72வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் ஏற்பாட்டில் “தளபதி” ரத்ததான முகாம் சார்பில் கோவை அரசு மருத்துவமனைக்கு நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ரத்ததானம் வழங்கக்கூடிய நிகழ்ச்சி சிறப்பான முறையில், தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

“தளபதி” ரத்ததான இயக்கத்தை சுமார் 15 ஆண்டு காலமாக தொடர்ந்து கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் சார்பிலும், பீளமேடு பகுதி கழகத்தின் சார்பிலும் நாங்கள் நடத்தி வருகின்றோம். முத்தமிழறிஞர், செம்மொழி காவலர், கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா, திராவிட நாயகன், அன்புத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் “தளபதி” அவர்களின் பிறந்த நாள் விழா, திராவிட இயக்கத்தின் இணைய தலைவர், அன்பிற்குரிய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா ஆகிய மூன்று பிறந்தநாள் விழாக்களுக்கும் இது போன்ற பெரிய அளவில் மருத்துவ முகாம்களை நடத்தி அதன் மூலம் இங்கு இருக்கக்கூடிய பல்வேறு இளைஞர்கள் அந்த மருத்துவ முகாமில் கலந்து கொண்டு ரத்தத்தை தானமாக வழங்கி வருகிறார்கள். இந்த ரத்ததானம் முகாம் மூலம் கிடைக்கும் ரத்தங்கள் கோவை அரசு மருத்துவமனைக்கு தான் இதுவரை வழங்கப்பட்டு வருகிறது. நாங்கள் இது வரை 20 க்கும் மேற்பட்ட மிகப்பெரிய ரத்ததான முகாம்களை நடத்தி இருக்கின்றோம். ரத்ததான முகாம்கள் நடத்துவது மட்டுமல்ல அன்றாடம் யாராவது வந்து அறுவை சிகிச்சைக்கோ, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைக்கு ஏதாவது ரத்தம் தேவைப்பட்டு கேட்டால் உடனடியாக எங்களது “தளபதி” ரத்ததான இயக்கத்தின் சார்பில் ரத்தம் வழங்கப்பட்டு வருகிறது. அதை ஒருங்கிணைத்து, தலைமை செயற்குழு உறுப்பினர் வீ.பாலசுப்ரமணியம் கடந்த 15 ஆண்டு காலமாக என்னோடு இணைந்து அனைத்து தரப்பு மக்களுக்கு தீவிர சிகிச்சைகளுக்காக அந்த ரத்ததானத்தை வழங்குவதற்கு உறுதுணையாக இருந்து வருகிறார். இந்த முகாமையும் முன் நின்று நடத்திக்கொண்டிருக்கிறார்.

கோவை மாவட்டத்தில் இந்த ஆண்டு நம்முடைய மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி வழிகாட்டுதல் படி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுக் கூட்டங்கள், தெருமுனை பிரச்சார கூட்டங்கள், நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய நிகழ்ச்சிகள், மரக்கன்றுகள் நடுதல் போன்ற பல்வேறு விழாக்களை நடத்தி வருகிறோம். அதன் தொடர்ச்சியாக இன்றைக்கு இந்த ரத்த தான முகாம் நடைபெறுகிறது. இந்த ரத்ததான முகாமில் பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் வந்து அவர்களது ரத்தத்தை தானமாக வழங்கி வருகிறார்கள்.

“தளபதி” ரத்ததான இயக்கத்தின் சார்பில் கோவை அரசு மருத்துவமனைக்கு இதுவரைக்கும் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன் பெறும் வகையில் ரத்தம் வழங்கப் பட்டுள்ளது. தன்னார்வலர்கள், திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய இளைஞர் அணியை சார்ந்தவர்கள், கழக தொண்டர்கள், நிர்வாகிகள், மகளிர் அணியை சார்ந்தவர்கள், பீளமேடு பகுதி, கோவை மாநகரத்தில் இருக்கக்கூடிய பல்வேறு கல்லூரிகளில் பயின்று வருகின்ற மாணவ, மாணவிகள் பலர் வந்து தங்களது ரத்தத்தை தானமாக வழங்கி வருகிறார்கள்.

அது மட்டுமல்ல இந்த ரத்த தானத்தை பாராட்டி ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட ஆட்சியர் மூலமாக “தளபதி” ரத்ததான இயக்கத்திற்கு உலக ரத்த தான நாள் அன்று அந்த சேவையை பாராட்டி விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மதிப்புக்குரிய

அர்ச்சனா பட்நாயக் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த காலத்தில் இருந்து இன்று வரை தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் “தளபதி” ரத்த தான இயக்கத்திற்கு “தளபதி” ரத்ததான இயக்கத்தை பாராட்டி, ரத்ததான சேவையை பாராட்டி பல விருதுகள் வழங்கப்பட்டிருக்கிறது

என்பதையும் இந்த நேரத்துல நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்முகாமில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார், மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், கழக தீர்மானக்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து, சட்டத் துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் பி. ஆர். அருள்மொழி, தீர்மானக்குழு உறுப்பினர் மு.இரா.செல்வராஜ், தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மறை, வர்த்தகர் அணி இணைச் செயலாளர் நா.முருகவேல், தொழிலாளர் அணி துணைச் செயலாளர் தமிழ்செல்வன், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.மணிகண்டன், நோயல் செல்வம், ஆடிட்டர் வெ.சசிகுமார், ச.கார்த்திகேயன், சரஸ்வதி புஷ்பராஜ், ச.குப்புசாமி, பகுதிக் கழகச் செயலாளர்கள் சிங்கை மு.சிவா, எஸ்.எம். சாமி, துரை.செந்தமிழ்ச் செல்வன், மா.நாகராஜ், இரா.சேரலாதன், கோவை லோகு, கே.எம்.ரவி, எ.எம். கிருஷ்ணராஜ், வி.ஐ.பதுருதீன், மாநகராட்சி கிழக்கு மண்டலத் தலைவர் இலக்குமி இளஞ் செல்வி கார்த்திக், நிலைக் குழுத்தலைவர்கள் சாந்தி முருகன், தீபா தளபதி இளங்கோ, வி.பி.முபசீரா, வட்டக் கழகச் செயலாளர்கள் முருகானந்தம், கி. நாராயணன், மா.சிவக்குமரன், ஏ.எஸ்.நடராஜ், டவுன் பா.ஆனந்த், த. சுரேஷ்குமார், தி.இளங்கோவன், வழக்கறிஞர் ப.ப.சிவகுமார், அமானுல்லா, நா.சண்முக சுந்தரம், சிங்கை அன்பு, ப. மோகன்ராஜ், எஸ்.ஜே. தாஸ், நவீன் முருகன், சுரேஷ் நாராயணன், கராத்தே வீரமணி, கேபிள் நித்யானந்தம், கண்ணன், தம்பி சண்முகசுந்தரம், எஸ்.போஸ், அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள் இளைஞர் அணி இரா.தனபால், பொறியாளர் அணி நா.பாபு, விவசாய தொழிலாளர் அணி சிவராமன், தொண்டர் அணி ஆ.கண்ணன், தகவல் தொழில் நுட்ப அணி ஆர். கே.சுரேஷ்குமார், கராத்தே அர்ஜுனன், சிறுபான்மையினர் நலக்குழு இலா.தேவசிலன், ஆதிதிராவிடர் நலக்குழு டெம்போ சிவா, தி.கண்ணன், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் சு.தனபால், மாமன்ற உறுப்பினர்கள் சுமித்ரா தீபக், அம்பிகா தனபால், அ.மரியராஜ், பிரவீண், கீதா சேரலாதன், ஆதி மகேஸ்வரி, முனியம்மாள் பாலமுருகன், ஷர்மிளா, அம்சவேணி மணிகண்டன், சுமா விஜயகுமார், பேபி சுதா, பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள் கஸ்தூரி அருண், என்.டி.சின்னச் சாமி, மா.ரவி, சாரமேடு இஸ்மாயில், சதீஷ்குமார், திராவிட மணி, சி.எம். வேலுமணி, சி.டி.சி.நடராஜ், அதிரடி அல்தாப், ராமகிருஷ்ணன், அணிகளின் துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் லாரா பிரேம்தேவ், கோவை அருண், இப்னுமசூது, சுபாஷ், மனோஜ் குமார், பிரகாஷ், டேனிஷ், சரவணன், அமீன், தினேஷ் குமார், செந்தில்குமார், ராஜேஷ்குமார், கேபிள் சேகர், ஆடிட்டர் ராஜேந்திரன், பாலச்சந்திரன், கங்கை ரவி, மதன், சூர்யா, நவாப், தினேஷ், உமர், பாபு கணேஷ், அருண் பிரசாத், மாமன்ற முன்னாள் உறுப்பினர் கேசவன் உள்பட கழக செயல்வீரர்கள், கழகத் தொண்டர்கள், BLA 2 பாகமுகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், இரத்த தான தன்னார்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் புதுக்கோட்டைக்கு வருகை!

# புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர் எஸ்.ரகுபதி – கே.கே.செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!





புதுக்கோட்டை, மே 23 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், இயற்கை வளம் மற்றும் சுரங்கத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்றும், நாளையும் (மே 23, 24) ந்தேதிகளில் புதுக்கோட்டை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக விமான நிலையத்திலிருந்து கார் மூலம் கந்தர்வக்கோட்டைக்கு வருகை தரும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மே23ந் தேதி மாலை 6 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட எல்லையான தச்சங்குறிச்சியில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட திமுக சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக் குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் ஆகியோர் தமது அறிக்கையில் கூறி உள்ளனர்.



திருத்துறைப்பூண்டியில் தமிழ்ச்சங்க துவக்கவிழா நடைபெற்றது. இந்த துவக்கவிழாவில் திரைப்பட பாடலாசிரியர் கவிஞர் யுகபாரதி, திரைப்பட வசனகர்த்தா வழக்கறிஞர் தய்.கந்தசாமி உள்ளிடோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர். தமிழ்ச்சங்கம் சார்பில் சிறந்த படைப்பாளிகளுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. சங்கத்தின் தலைவர் எடையூர் மணி மாறன், செயலாளர் நூலகர் ஆசைத்தம்பி, பொருளாளர் கவிஞர் மணலி அப்துல் காதர் உள்ளிட்டோர் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுடன் இணைந்து விழாவை சிறப்புடன் நடத்தினர்.

